அறிஞர் அண்ணா சதுக்கத்தை அழகுபடுத்தல்

* 196 வினா—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரறிஞர் அண்ணா சமாதிக்கு அருகில் அழகிய நீர் ஊற்று அமைப்பதற்கு ஜெர்மன் அரசு உதவியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசில் உள்ள நகரத்தின் மேயர், சென்னை மாநகராட்சிக்குப் பரிசாக அளித்த நீர் ஊற்றுப்பொறி ஒன்றினை இவ்வரசு மாநகராட்சியிடமிருந்து பெற்றுள்ளது. இதை அமைப்பதற்கான தக்க இடம் ஒன்று அரசின் ஆய்விலுள்ளது.

Building Materials Display Centre

* 197 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state the grounds on which items are selected for display at the Building Materials Display Centre, Chepauk, Madras?

மாண்புமிகு திரு. எஸ் .ஜே. சாதிக்பாட்சா : ஒரு கட்டிட அமைப்பின் பாகமாக உள்ள பொருள்கள் அல்லது அதன் கட்டுமானப்பணிக்குப் பயன் படுகிற பொருள்கள் அல்லது கட்டிடங்களின் தோற்றத்திற்கு அழகூட்டப் பயன்படுத்தப்படுகிற பொருள்கள் குறிப்பிட்ட வாடகையைச் செலுத்துவதன் மேல் கட்டிடப் பொருள்கள் காட்சிக்கூடத்தில் காட்சிப் பொருட்களாக ஏற்கப்படுகின்றன.

* 198 Q.—THIRU P. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the staff employed ta the Building Materials Display Centre; and

(*b*) the cost of maintenance of this Centre?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) ஒரு வழிகாட்டியும், ஒரு உதவியாளரும் கட்டிடக் காட்சிப் பொருள்கள் கலைக்கூடத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

(இ) ஆண்டொன்றுக்கு ரூபாய் 10,000.

திரு. ரா. ரா. முனுசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்த கட்டிட காட்சிப் பொருள்கள் கலைக்கூடத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள ஆட்கள் போதவில்லை, அதனால் பல பேர் ஒரு நாள் பூராவும் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது. ஆகவே, ,ஆட்களை அதிகரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : போதுமான வசதி இருந்து வருகிறது. நமக்கு கிடைத்து இருக்கும் கணக்குப்படி வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 8,000 தான். ஆனால் செலவு ரூ. 10,000 ஆகிறது. ஏற்கெனவே அரசுக்கு ரூ. 2,000 இழப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அங்கே யிருக்கிற பணியாளர்களே போதும் என்று அரசாங்கம் கருதுகிறது.